*6*

# இயேசுவின் அதிகாரத்துவமும் "புதிய வெளிப்பாடுகளும்"

*பழைய ஏற்பாடு நமது அதிகாரத்துவமாக இருப்பதில்லை. பழைய உடன்படிக்கை எல்லா மக்களுக்குமல்ல ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கு என்றே நோக்கங்கொண்டிருந்தது, மற்றும் அது நிரந்தரமாயிருக்கும்படியாக ஒருக்காலும் நோக்கங்கொண்டிருந்ததில்லை. நியாயப்பிரமாணம் இயேசுவின் புதிய உடன்படிக்கையினால் இடம்மாற்றப்பட்டது மற்றும் அது இனியும் எவரொருவரையும் கட்டுப்படுத்துவதில்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது.*

*இப்பொழுதும் நாம், தெய்வீக அதிகாரத்துவத்தைப்பற்றிய ஏற்புடைய இன்னொரு கேள்வியை எழுப்புவோம். புதிய ஏற்பாடு எழுதப்பட்டதில் இருந்து தேவனிடமிருந்து வெளிப்படுத்துதல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறுபவர்களைப் பற்றிய விஷயம் என்ன? சிலர், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் பெற்றிருந்த அதே வெளிப்படுத்துதலைத் தாங்களும் நேரடியாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்துகின்றனர். மற்றவர்கள், இதையோ அல்லது அதையோ செய்வதற்குத் தங்களைத் தேவன் எவ்வாறு வழிநடத்துகிறார் என்பது பற்றிப் பேசுகின்றனர். இன்னும் பிறர், புதிய ஏற்பாட்டின் குறிப்பிட்ட ஒரு போதனைக்குக் கீழ்ப்படியும்படி தேவன் எதிர்பார்ப்பார் என்று தாங்கள் "நினைப்பது" (அல்லது "உணருவது") இல்லை என்று கூறி புதிய வெளிப்பாட்டின் குறைவான அளவு நேரடிக் கூற்றுகளை ஏற்படுத்துகின்றனர். மக்கள் புதிய ஏற்பாட்டிற்கு முரண்பட்டு நிற்கும்போது, அவர்கள் தங்களைத் தேவனுடைய அதிகாரத்துவத்திற்குக் கீழ்ப்படுத்துவதில்லை; அவரது வசனத்தின்மீது நியாயந்தீர்க்கும் இடத்தை அவர்கள் மேற்கொள்கின்றனர்.*

*இந்த "புதிய வெளிப்பாடுகளின்" நம்பகத்தன்மையைத் தீர்மானிப்பதற்கு நாம் இவற்றைத் தனித்தனியாக பரிசோதிக்க அவசியமில்லை, ஏனெனில் இவையாவும் ஒரேவிதமான பிரச்சனையைக் கொண்டுள்ளன. ஒரு புதிய போதனையானது, புதிய ஏற்பாட்டின் உபதேசத்துடன் ஒன்றையும் கூட்டுவதில்லை என்றால், அது தரப்படக்காரணம் எதுவும் இருப்பதில்லை, ஒரு போதனையானது, புதிய ஏற்பாட்டின் போதனைக்கு முரண்பட்டிருக்கும் என்றால், அது தவறானதாக இருக்க வேண்டும். தேவன் தமக்குத் தாமே முரண்பட்டு இருக்கும்படி கூறுவார் என்றால், இது அவரது இயல்பைப் பற்றிக் கூறுவது என்ன? உண்மையில் அவர் நடபடிகள் 10:34, 35க்கு நேரெதிரான வகையில் பட்சபாதமுள்ளவராக இருக்கிறாரா? நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு முரண்பாடான அறிவுறுத்துதல்கள் தருவதில், அவர் 1 கொரிந்தியர் 14:33க்கு நேரெதிராக குழப்பத்திற்குத் தேவனாக இருக்க மாட்டாரா?*

புதிய வெளிப்படுத்துதல்கள் மதிப்பு கொண்டவையாக உள்ளன என்றால், புதிய ஏற்பாட்டின்மீது நாம் நம்பிக்கைவைக்கமுடியுமா? வேதவாக்கியங்கள் ஆண்டவராகிய இயேசுவின் சித்தத்தை வெளிப்படுத்துதலைக் கொண்டுள்ளன என்றும், அவருடன் என்றென்றைக்கும் வாழ்வதற்கு எங்குமுள்ள மக்கள் யாவரும் அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்றும் நாம் எவ்வாறு தைரியம் கொள்ளமுடியும்?

இயேசுவின் அதிகாரப்பூர்வமான செய்தியானது அவரால் விசேஷமாய் நியமிக்கப்பட்ட செய்தியாளர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு எல்லாக் காலத்திற்குமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திலேயே இயேசுவின் அதிகாரத்துவம் நிறைவுப்படுத்தப்பட்டு நிரந்தரமானதாயிற்று என்றால் பிந்திய கூடுதல்கள் அவசியமற்றவையாக உள்ளன.

## உறுதிப்படுத்தப்பட்ட செய்தி

புதிய ஏற்பாடு தேவனுடைய வசனம் என்று உரிமைகோருகிறது. 2 தீமோத்தேயு 3:16, 17ல் பவுல், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று அறிவித்தார்.[1]

வேறொரு இடத்தில் பவுல், தாமும்கூடத் தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்துதலைப் பெற்றுக் கொண்டதாகவும், எனவே தாம் போதித்த மற்றும் எழுதிய விஷயங்கள் ஏவுதல் பெற்றவையாகவும் அதிகாரத்துவம் உள்ளவையாகவும் இருப்பதாகவும் உரிமை கோரினார். அவர், "... என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்ல வென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறினார் (கலாத்தியர் 1:11, 12). இது நடைபெற்ற செயல்முறையை அவர் விளக்கப்படுத்தினார்: "தேவன் அதனை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1 கொரிந்தியர் 2:10அ). ஒருசில வசனங்களுக்குப் பின்னர், அவர் இந்தச் செயல்முறை பற்றியும் தேவனுடைய போதனைக்குப் பதில்செயல் செய்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றியும் பின்வருமாறு விரித்துரைத்தார்:

> நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரிந்தியர் 2:12, 13).

பவுல், தமது போதனையை "மெய்யாகவே தேவவசனந்தான்" என்று

ஏற்றுக்கொண்ட தெசலோனிக்கே நகரின் விசுவாசிகளுக்கு நன்றியை உரைத்தார் (1 தெசலோனிக்கேயர் 2:13). எபேசியர் 3:3-6ல் அவர் இந்த வெளிப்படுத்துதலைப் பற்றி மீண்டும் குறிப்பிட்டு, இதன் எழுத்து வடிவத்தில் இதை வாசிப்பவர்கள், "கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து அவருக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்" என்று அறிவித்தார் (வசனம் 5). மேலும் வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்வதில் தாம் தனித்து இருக்கவில்லை ஏனெனில் அது தேவனுடைய "பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும்" வெளிப்படுத்தப்பட்டிருந்தது (வசனம் 6) என்றும் அவர் கூறினார்.

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், தாங்கள் போதித்துக் கொண்டிருந்தவை, தேவனிடத்தில் தோன்றியவை என்று விசுவாசித்தனர். இருப்பினும், எவரொருவரும் தைரியமான உரிமைகோருதல்களை ஏற்படுத்தக் கூடும். அப்படிப்பட்ட பல உரிமைகோருதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் அவைகள் தவறென்று அடிக்கடி வெளியாக்கப்பட்டுள்ளன. பின்பு நாம், புதிய ஏற்பாட்டின் உரிமைகோருதல்களை அதிகாரத்துவம் உடையவை என்று ஏற்றுக்கொள்ள வேண்டியது ஏன்? அது ஒரு நல்ல கேள்வியாக உள்ளது - அந்தக் கேள்வியிலிருந்து புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பின்வாங்கிப் போகவில்லை. அவர்களின் பதிலை எபிரெயர் 2:1-4 வசனப்பகுதி தருகிறது:

> ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும், கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் - 1 கொரிந்தியர் 2:9-13ல் பவுல் செய்தது போன்றே - தமது செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்தது என்றும் அது பரிசுத்த ஆவியானவரால் உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்தது என்றும் கூறினார். இந்தச் செய்தி *எவ்வாறு* உத்தரவாதப்படுத்தப்பட்டது என்பதையும் அவர் கூறினார். "அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் பலவிதமான பலத்த செய்கைகள்" (எபிரெயர் 2:4) என்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களினால் "தேவன் தாமே சாட்சியளித்தார்."[2] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், போதனையானது தேவனுடைய இடைப்படுதலினால் மாத்திரம் செய்திருக்கப்படக்கூடிய செயல்களின் நிகழ்த்துதலில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் செயல்களைச் செய்யும்படி அனுமதிக்கப்பட்டிருந்த மக்கள், தேவனுடைய உண்மையான செய்தியாளர்களாக இருக்கும்படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தனர்.[3]

போதகர் நம்பத் தகுதியானவராக இருக்கிறார் என்றால், அவரது போதனை வாய்வழியாகவோ அல்லது எழுத்திலோ, எவ்வாறு முன்வைக்கப்பட்டாலும் அதுவும் நம்பத்தகுந்ததாகவே உள்ளது. இவ்வாறாக நாம் புதிய ஏற்பாட்டை தேவனுடைய அதிகாரத்துவமான வசனம் என்று ஏற்றுக்கொள்ளமுடியும்.

தேவன் தமது வசனத்தை எழுத்து வடிவில் வைத்தார் என்ற உண்மை யானது துதித்தல் மற்றும் நன்றிசெலுத்துதல் ஆகியவற்றிற்குக் காரணமாக உள்ளது. எழுத்து வடிவம் என்பது போதனையின் நம்பகத் தன்மையைக் கூட்டுகிறது. மனித உறவுகளில் மக்கள், எழுதப்பட்ட பதிவேடுகளை நடத்தும் விதம் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நாம் ஒரு ஒப்பந்தத்தை நிறைவுசெய்து, அதைச் சாத்தியமான அளவுக்கு உறுதியானதாக்க விரும்பும் போது, நாம் "அதை எழுத்து வடிவில் இடுவோம்." மேலும் எழுத்துவடிவமானது வசனத்தை நாம் மீண்டும் மீண்டும் படிக்கக்கூடியதாக உள்ளது. நமக்குத் தெளிவு தேவைப்படும்போதெல்லாம் நாம் அதைத் திரும்பவும் வாசிக்கமுடியும். அதன் நிரந்தரத் தன்மையானது, தேவன் எதைவிரும்புகிறார் என்பதுபற்றிய கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைக்கவும் நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவரது வசனம் போதிப்பதும் அர்த்தப்படுத்துவதும் என்ன என்பதுபற்றி நாம் அதிகமாகக் கற்றுக் கொள்ளுகையில் வளரவும் நமக்கு வழியமைக்கிறது.

## நிலையான மற்றும் கட்டுப்படுத்தும் செய்தி

புதிய ஏற்பாட்டை அதன் எழுதப்பட்ட வடிவத்தில் இட்ட கிறிஸ்தவர்கள், அது மனித குலத்திற்குத் தேவனுடைய கடைசி வெளிப்பாடு என்பதாக இருந்ததென்று நம்பியிணங்கி இருந்தனர். அவர்களின் எழுத்துக்கள் விசுவாசத் திற்கு அடிப்படை என்ற வகையில் படிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் போதித்தனர் மற்றும் அவைகள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கர்த்தர் மறுபடி வரும் வரையில் சபையின் நடைமுறையாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் போதித்தனர்.

பேதுரு, வேதவசனங்களின் நிரந்தரத்தன்மையை, தேவனைப்பிரியப்படுத்த வேண்டியதற்கு மக்கள் அறியத் தேவையான யாவற்றையும் தேவன் அருளியுள்ளார் என்ற உண்மையுடன் தொடர்புபடுத்தினார் (2 பேதுரு 1:3, 4). கிறிஸ்தவர்களுக்கு, "நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது தந்தருளி" உள்ளது (வசனம் 3). இந்த விஷயங்களை அறிவதன் மூலம் நாம் "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களா"க முடிகிறது (வசனம் 4). கி.பி. முதலாம் நூற்றாண்டில் பேதுரு தமது (இந்த) நிருபத்தை எழுதியபோது, கிறிஸ்தவர்களுக்கு தேவைப்பட்ட "யாவும்" அவற்றின் இடத்தில் இருந்தன.

யூதா, தமது வாசகர்கள் கொண்டிருந்த பொதுவான இரட்சிப்பைப் பற்றிப் பேசினார் - அதாவது இயேசுவின் ஊழியம் மற்றும் போதனை ஆகியவற்றைப் பற்றிப் பேசினார் (காண்க வசனம் 17). சபையானது, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக" போராடவேண்டும் என்று அவர் கூறினார் (வசனம் 3; என்னால் வலியுறுத்தப்படுகிறது).[4]

புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள், எவ்வாறு வாழ்வது என்று கிறிஸ்தவர்களுக்குக் கூறத்தேவையான எல்லாப் போதனைகளையும்

தேவனிடத்திலிருந்து தாங்கள் பெற்றிருந்ததாக நம்பினர். அதனால் தான் அவர்கள், அந்தப் போதனைக்கு உண்மையாக நடந்துகொள்ளும்படி சீஷர்களை வற்புறுத்தினர். தீமோத்தேயுவுக்குப் பவுல் பின்வருமாறு எச்சரிக்கைசெய்தார்,

> ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய் கொண்டவனுமாயிருக்கிறான். அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி ... (1 தீமோத்தேயு 6:3, 4).

தீமோத்தேயுவுக்கு அவர், தமது கடைசி அறிவுறுத்துதலில் பின்வருமாறு எழுதினார்:

> நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும் (2 தீமோத்தேயு 4:1-4).

பவுல், தமது போதனையின் நிறைவுத்தன்மையையும் நிரந்தரத்தன்மையையும் நம்பினார். அதனால் தான், கலாத்தியர்கள் வேற்றுமையான உபதேசத்திற்குத் திரும்பிய போது அவர் பின்வருமாறு எச்சரிக்கையை வெளிப்படுத்தினார்:

> உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப்

*பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்! (கலாத்தியர் 1:6-9).*

## நிறைவு செய்தி

புதிய ஏற்பாட்டின் மனித எழுத்தாளர்கள், தேவனிடத்தில் இருந்து வந்தது என்று நம்பிய போதனைகள் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன. அவர்களின் உரிமைகோருதல், அவர்களால் செய்ய முடிந்த இயற்கைக்கு மேலான செயல்களில் தேவனுடைய சாட்சியத்தினால் அதிகாரத்துவப் படுத்தப்பட்டது. அதே எழுத்தாளர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் தாங்கள் எழுதிக்கொண்டிருந்த காலத்தில், எதை விசுவாசிப்பது மற்றும் எவ்வாறு வாழ்வது என்பவற்றை அறிவதற்கு அவசியமான எல்லாவற்றையும் தேவன் ஒப்புவித்திருந்தார் என்று உரிமைகோரினர். அவரைப்பின்பற்ற விரும்புகிறவர்கள் அந்த வெளிப்படுத்துதலின் போதனைக்கு, புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற போதனைக்கு, தேவனிடமிருந்து வந்துள்ள கடைசி வெளிப்படுத்துதலுக்கு பற்றுறுதி கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

தேவனிடத்திலிருந்து வந்தது என்று உரிமை கோரும் தற்காலத்திய வெளிப்படுத்துதல் எதுவும் இந்த உண்மைகளின் வெளிச்சத்தில் மதிப்பிடப்படவேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் நாம் மதிப்பிடக்கூடுவதற்குமுன்னர், சத்தியத்தின் அடிப்படைப் பண்பு ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும்: ஒன்றுக்கொன்று முரண்பட்டுநிற்கும் இருவிஷயங்கள், ஒரேவேளையில் உண்மையாக இருக்க முடியாது, இருப்பினும் இவை இரண்டுமே தவறாக இருக்கக்கூடும். பின்வரும் எளிய கூட்டல் கணக்குகள் இரண்டின் பிரச்சனையைப்பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: “2+2=3”; “2+2=5.” “3” மற்றும் “5” என்பவை முரண்பாடான விடைகளாக இருப்பதால், அவைகள் உண்மையானவையாக இருக்க முடியாது. இவ்விஷயத்தில் இரண்டு விடைகளுமே தவறானவைகளாக உள்ளன; ஒருவேளை “2+2=4” என்பது கணக்கியல் உண்மைகளில் மிகச்சிறப்பாக அறியப்பட்ட ஒன்றாக உள்ளது எனலாம்.

இன்னொரு உதாரணத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். யாரேனும் ஒருவர், “மழை பெய்து கொண்டிருக்கிறது” என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். மழை பெய்து கொண்டிருத்தல் அல்லது மழைபெய்யாதிருத்தல் என்ற இரண்டில் ஒன்றுதான் உண்மையாயிருக்கக்கூடும், மற்றும் விஷயம் என்னவென்று காண நாம் வானத்தைக் கண்ணோக்கிப்பார்க்க முடியும். ஒரே இடத்தில் ஒரே வேளையில் மழைபெய்துகொண்டும் மழைபெய்யாதிருக்கவும் இயலாது. ஒரே நேரத்தில் மழைபெய்கிறது மற்றும் மழைபெய்யவில்லை என்று கூறும் ஒருவர் மதியுள்ள செயல் செய்வதில்லை என்பதைச் சிறுபிள்ளையால் கூடக் காணமுடியும்.[5]

சத்தியத்தைப்பற்றிய அடிப்படைக் கொள்கையானது, புதிய ஏற்பாட்டுபோதனைக்கு முரண்பட்டு நிற்கும் நவீன வெளிப்படுத்துதல்கள் என்று அழைக்கப்படும் விஷயங்கள் ஏன் உண்மையாய் இருக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன. இயேசு சத்தியமாக இருந்தார் (யோவான் 14:6), சத்தியத்தைப் போதித்தார் (யோவான் 8:32) மற்றும் சத்தி

யத்தினால் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார் (யோவான் 17:17). புதிய ஏற்பாடு அவரது போதனையாக இருப்பதால், அதுவும் சத்தியத்தையே போதிக்கிறது (காண்க கலாத்தியர் 4:16; எபேசியர் 1:13; 4:15; 5:9: கொலோசெயர் 1:5, 6). தேவன் நம்மைக் குழப்ப விரும்புவதில்லை (1 கொரிந்தியர் 14:33), ஆனால் நாம் சத்தியத்தைக் கற்றுக்கொண்டு மீட்கப்பட வேண்டும் (2 தெசலோனிக்கெயர் 2:10; 1 தீமோத்தேயு 2:4) என்று விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துள்ளோம். யாரேனும் ஒருவர், புதிய ஏற்பாட்டிற்கு முரண்பாடான கூற்று ஒன்றை ஏற்படுத்தினால் - அவர் தமது கூற்று தேவனிடத்தில் இருந்து வெளிப்படுத்துதலாக வந்தது என்று கூறினாலும் கூட - அவர் சத்தியத்தைக் கூற முடியாது என்று நாம் அறிந்திருக்கிறோம். முரண்பாடான கூற்றுகள் உண்மையாக இருக்க முடியாது, மற்றும் அவர், "ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட" (யூதா 3) கடைசி அதி காரத்துவமான புதிய ஏற்பாட்டு போதனைக்கு முரண்படுகிறார்.

இவ்வாறாக நாம், "நவீனகால வெளிப்படுத்துதல்" எதையும் மதிப்பிட இயலும். நாம் முதலாவதாக, மெய்போலத் தோன்றும் இந்த வெளிப்பாடு, புதிய ஏற்பாடு போதிக்கும் விஷயங்களுடன் சீர் பொருந்தியுள்ளதா இல்லையா என்று நாம் கேட்க வேண்டும். இதற்கு இல்லை என்பது பதிலாக இருக்கும் என்றால், பின்பு நாம், புதிய வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொண்டு இருப்பதாகக் கூறுபவரிடத்தில், கர்த்தருடைய இயல்பு அல்லது வாக்குத்தத்தம் மாறியது எவ்வாறு மற்றும் ஏன் என்று விளக்கம் தரும்படி கேட்க வேண்டும். புதிய ஏற்பாடானது கர்த்தருடைய வெளிப்படுத்துதலின் கடைசிக்கூற்றை முன்வைப்பதாலும், தேவன் மாறாதவராக இருக்கிறார் (காண்க எபிரெயர் 13:8) என்பதாலும், புதிய ஏற்பாட்டிற்கு முரண்படும் எந்தப்போதனையும் தவறானதாக *இருக்க வேண்டும்* என்று நாம் அறிகிறோம். மெய்போலத்தோன்றும் அந்த வெளிப்பாடு புதிய ஏற்பாட்டை எதிர்த்து நிற்காதிருந்தால் விஷயம் என்ன? அப்போது நாம், அது உண்மையிலேயே ஒரு புதிய வெளிப்பாடாக உள்ளதா அல்லவா என்று கேட்க வேண்டும். அது மாறுபட்டதாக இல்லையென்றால், அது அவசியமற்றதாக உள்ளது. வேதாகமமே நமக்குத் தேவையான எல்லாமுமாக உள்ளது.

## முடிவுரை

நாம் தேவனை ஆராதிக்கும் நமது ஆராதனையில் என்ன செய்ய வேண்டும் அல்லது வாழ்வின் வேறு எந்தப் பகுதியிலும் என்ன செய்யவேண்டும் - என்று தேவன் விரும்புவது என்ன என்பதை தேவன் நமக்கு வெளிப்படுத்தினால் மட்டுமே அறிந்து அறிந்துகொள்ள முடியும் (காண்க உபாகமம் 29:29). ஏனெனில் அவர் ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கிறார், சபை போதிக்கவும் செய்யவும் வேண்டியது என்ன என்பதைத் தீர்மானிக்க எல்லா அதிகாரமும் அவருக்கே தரப்பட்டுள்ளது. அவரது அதிகாரத்துவமான போதனையானது, அவர் தேர்ந்து கொண்ட செய்தியாளர்களுக்குத் தரப்பட்டிருந்தது, மற்றும் அவர்கள்மீது அவர் தமது ஆவியானவரைப் பொழிந்தருளியதன்மூலம், அவர்கள் போதித்தவற்றின் அதிகாரத்துவத்தை உத்தரவாதப்படுத்தினார். அவர்களின் போதனை எழுதப்பட்டு புதிய ஏற்பாடு என்று அறியப்பட்ட எழுத்துக்களின் அமைவாகத் தொகுக்கப்பட்டுள்ளது. வேதவாக்கியங்களில் பாவம் மற்றும் இரட்சிப்பு பற்றி தேவனுடைய நிறைவு வார்த்தை அடங்கியுள்ளது, மற்றும்

அதில் நாம் கண்டறியும் போதனையைப் பின்பற்றப் போதுமான அளவுக்கு நாம் அவர் மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

அவரது வார்த்தையின் சத்தியத்திற்கான நமது தேடுதலில் நமக்கு வேறு போதகரோ அல்லது போதனையோ எதுவும் தேவைப்படுவதில்லை. மோசேயைக்காட்டிலும் கிறிஸ்து மேலானவராக இருக்கிறார், மற்றும் அவர் நியாயப்பிரமாணத்தை இடமாற்ற ஒரு புதிய உடன்படிக்கையைக் கொடுத்துள்ளார். புதிய ஏற்பாடு எழுதப்பட்டகாலத்தில் அவரது போதனை அதன் நிறைவுடன் வெளிப்படுத்தப்பட்டது, அதற்கு வேறு எந்த உபதேசமும் துணையாகச் சேர்க்கப்படத் தேவையில்லை. ஜீவன் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றின் வார்த்தைக்கு நாம் அவரிடத்தில் மாத்திரமே திரும்ப வேண்டும்.

விசுவாசம் மற்றும் நடைமுறை ஆகியவற்றின் கேள்விகளுக்கான பொதுவான அதிகாரத்துவத்தை நிலைநாட்டும் விஷயத்தின் இருதயம் போன்மையப்பகுதி யாக இந்த உண்மைகள் இருக்கின்றன. இவைகள் படிக்கப்பட வேண்டிய பிரகாரம் அடிக்கடி படிக்கப்படாதபடியால், கிறிஸ்தவ போதகர்கள், தாங்கள் புரிந்துகொள்ளாத ஒரு விசுவாசத்தை, தகவலறிவுள்ள கலந்துரையாடலை ஏற்படுத்தப்போதிய ஞானம் கொண்டிராத மக்களுக்குக் கொண்டு செல்ல இப்போது முயற்சி செய்கின்றனர்.

நாம் விசுவாசத்தில் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், ஆனால் அது தகவல் அறிவு கொண்ட ஒரு விசுவாசமாக, சரியான அஸ்திபாரத்தின் மீது ஊன்றப்பட்டதாக இருக்க வேண்டும். பவுலின் கூற்றுப்படி, "இயேசுகிறிஸ்துதாமே மூலைக்கல்லாக இருந்து, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின்" உபதேசமே அந்த அஸ்திபாரமாக உள்ளது. அந்த அஸ்திபாரத்தின் மீது சபையானது -அது விசுவாசிக்கும் அல்லது நடைமுறைப்படுத்தும் எல்லாவற்றுடனும் - கட்டப்படவேண்டியதாக உள்ளது (எபேசியர் 2:20-22). நாம் விசுவாசத்தில் நடக்கத் தீர்மானிக்கையில், குறிப்பாக விசுவாசத்தினாலே ஆராதிக்கத் தீர்மானிக்கையில், சகலத்திலும் முக்கியமான இந்த அஸ்திபாரத்தைப் புறக்கணியாமல் இருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்வோம ாக.

குறிப்புகள்

[1]புதிய ஏற்பாடு தேவ ஆவியால் அருளப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்க, இந்த வசனங்களை உபயோகப்படுத்துவதற்கு சிலர் மறுப்புத்தெரிவிக்கின்றனர். பவுல் குறிப்பாக புதிய ஏற்பாட்டைப் பற்றி இப்படிக் கூறியிருக்க முடியாது, ஏனெனில் தீமோத்தேயுவின் வாலிபப் பருவத்தில் இது எழுதப்பட்டிருக்கவில்லை, மற்றும் பவுல் தீமோத்தேயுவுக்கு 2ம் நிருபத்தை எழுதியது முற்றுப்பெற்றிருக்கவில்லை. இருப்பினும், தெய்வீக தொடக்கத்தைக் கொண்டது என்று நிரூபிக்கப்படக்கூடிய எந்த எழுத்துக்களும் பவுலின் கூற்றுடன் பொருந்தும். இயேசுவின் போதனைகள், மாம்சத்தில் தேவன், மற்றும் அவருடைய விசேஷ செய்தியாளர்களின் மூலம் அவை கொடுக்கப்பட்ட விதம் ஆகியவற்றைக்காட்டுவதன்மூலம் இதையே புதிய ஏற்பாடு உரிமைகோருகிறது. இந்த செய்தியாளர்கள் வாய்மொழியாகவும் எழுத்தின்மூலமாகவும் இதை மற்றவர்களுக்குக் கடத்தினார்கள். அவர்களால் எழுதப்பட்டவைகளை இன்று நாம் வாசிக்கும்போது தேவனிடத்திலிருந்துவந்த போதனைகளையே நாம் வாசிக்கிறோம். இந்த காரணத்திற்காக,

*வேதவசனங்கள் நம்மை எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவர்களாக ஆக்கமுடியும்.* [2]ASV *வேதாகமம் (1901) "அற்புதங்கள்" என்பதற்கு புதிய ஏற்பாட்டில் மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்படும் மூன்று கிரேக்க பதங்களை மிகச்சரியாக மொழிபெயர்த்திருக்கிறது. இவைகள் "அடையாளங்கள்"* (*semeion*), *"அற்புதங்கள்"* (*teras; புதிய ஏற்பாட்டில் இது எப்போதும் பன்மையில், மற்றும் இரு வார்த்தைகளில் ஒன்றுடன் எப்போதும்), மற்றும் "செய்கைகள்"* (*dunamis*) *ஆக இருக்கின்றன. (யோவான் சுவிசேஷம் மிகவும் அடிக்கடி ஒரு நான்காம் வார்த்தையான "கிரியைகள்"* [*ergon*] *என்பதை பயன்படுத்துகிறது.)* Josh McDowell *மற்றும்* Bill Wilson *என்பவர்கள் "வேதாகமம் இந்த நிகழ்ச்சிகளை 'வல்லமையின் கிரியை' என்றும் 'உறுதிப்படுத்தும் அடையாளங்கள்' என்றும் எளிதாக விவரிக்கின்றன. அது எல்லா தத்துவஞானத்துக்குரிய சொற்புரட்டுகளைத் தவிர்க்கிறது மற்றும் ஒருவரை சரித்திர அத்தாட்சிக்கு பின் நோக்கி எடுத்துச் செல்கிறது" என்று கவனித்துள்ளனர். "அற்புதங்கள்" என்பதற்கு அவர்கள் இந்த விளக்கங்களைக் கொடுத்தனர்: "கருத்துள்ள உண்மையை சுட்டிக்காட்டும் ஒரு அரிதான அல்லது வழக்கத்திற்கு மாறான வல் லமை"* (Josh McDowell and Bill Wilson, *He Walked Among Us: Evidence for the Historical Jesus* [San Bernadino, Calif.: Here's Life Publishers, 1988], 263-64). [3]*ஒரு கிரியையானது உண்மையிலேயே இயல்பிற்கு அப்பாற்பட்ட துவக்கத்தைக் கொண்டிருந்தது என்று சரித்திரபூர்வ மான நிரூபணத்தைக் காட்டுமானால், அது அப்படியே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். "அற்புதமான உணர்ச்சிகளை தூண்டக்கூடியவைகளாக இருந்தால், அவைகள் சாட்சி குறித்த காரியங்களாக செய்யப்படமுடியும். அவைகள் போதுமான அளவு சாட்சிகொடுக்கக்கூடு மானால், பதிவுசெய்யப்பட்ட சாட்சியானது அந்த நிகழ்ச்சியைக் கண்டறிவது போலவே நிரூபணத்திற்கு அதே உறுதியைக் கொண்டிருக்கும் ... உலகத்தின் ஆயிரக்கணக்கான நீதிகுறித்த காரியங்களில், விஞ்ஞான சரித்திரசித்திரங்களோடுகூட, வாய்மொழியாகவோ அல்லது எழுதப்பட்ட பதிவேடு மூல மாகவோ நம்பப்படத்தக்க சாட்சிகளின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. நிரூபணத்தின் காரணங்களுக்காக, சட்டமன்றமானது ஒரு சாட்சியின் நேர்மைத்தன்மையை சந்தேகப்பட எந்தக் காரணமும் இல்லையென்றால், குற்றத்தை நேரில் கண்ட அந்த மனிதனின் சாட்சியத்தை, சட்ட மன்றமே நேரில் கண்டதுபோல் எடுத்துக்கொள்கிறது. மேலும், ஒரு நிகழ்ச்சியானது நம்பப்படத்தக்க வகையில், ஒருமுறை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பின், பதிவேட்டின் நம்பகத்தன்மையானது காலம் கடந்து சென்றதனால் மாற்றப்படுவதில்லை. லாசரு உயிரோடெழுப்பப்பட்ட நிகழ்ச்சியானது, யோவான் ஆரோக்கியமான மனநிலையுடனும் நல்ல ஞாபகசக்தியுடனும் உண்மையிலேயே நேரில்கண்டு, அதைப் பதிவு செய்திருந்தால், நிரூபணத்தின் நோக்கங்களுக்காக, நாம் அங்கிருந்து அதைக்கண்டதுபோல எடுத்துக்கொள்ளப்படுகிறது* (Bernard L. Ramm, *Protestant Christian Evidences: A Textbook of the Evidences of the Truthfulness of the Christian Faith for Conservative Protestants* [Chicago: Moody Press, 1953], 140-41). [4]*"ஒப்புவிக்கப்பட்ட" என்பதற்கான கிரேக்க வார்த்தை இங்கு paradidomi என்பது ஒப்படைக்கப்பட்ட, கையளிக்கப்பட்ட, பொறுப்பு கொடுக்கப்பட்ட என அர்த்தமாகும்.* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 761.) *அதே கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் அதன் வேறுபட்ட வடிவங்களில், இயேசுவைப்பற்றி அல்லது அவருடைய போதனைகளைக் கையளிப்பதைக் குறிப்பிட "பாரம்பரியங்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (காண்க லூக்கா 1:2; 1 கொரிந்தியர் 18:2, 23; 15:3; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6).* [5]*இன்றைய நாட்களில்*

*அநேகர் சத்தியத்தின் அடிப்படையின் வழியாக சிந்திப்பதில்லை, மற்றும் இது எப்படி நமக்குத் தெரியும். சத்தியத்தைக் கண்டுபிடிப்பதற்கான எந்த முயற்சியிலும், விவாதத்தில் சம்பந்தப்பட்ட எல்லாரும், சம்பந்தப்பட்ட முக்கியமான கருத்தைக் குறித்து ஒரு ஒப்பந்தத்தை அடையவேண்டும். (மழையைப் பற்றிய விவாதத்தில், மழை என்றால் என்ன என்பது பற்றி இரு தரப்பினரும் ஒரே விளக்கத்தைக் கொண்டிருக்கவேண்டும்.) மேலும், "உண்மைத் தன்மைக்கு" வேறொரு பெயர் "சத்தியம்" என்பதால், உண்மைத்தன்மை யானது (இவ்வாறு சத்தியம்) சிலவேளைகளில் மாறும் என்பதை அறிவது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. சிலவேளைகளில் மழை பெய்து கொண்டிருக்கிறது மற்றும் சிலவேளைகளில் உண்மை என்னவென்றால் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்த வித்தியாசமான உண்மை நிகழ்ச்சிகள் சாதாரணமாக, ஒரே இடத்தில் ஒரே வேளையில் நடைபெறுவதில்லை. இருப்பினும், நாம், எல்லா உண்மைத்தன்மைகளும் மழையைப்போல் வந்து கொண்டும், போய்க்கொண்டும் இருப்பதில்லை என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஒருவர் என்னதான் நினைத்தாலும், "2+2" என்பதற்கு சரியான விடை எப்போதுமே "4" தான். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் போதனை என்பது மழையைப்போல் இல்லாமல் "2+2=4" என்பதைப்போல் இருக்கிறது. இயேசு, "நாம் சத்தியத்தை அறியமுடியும்" என்று சொன்னார் (யோவான் 8:32).*